**சுருக்கம்**

பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – பொறியாளர் பணியமைப்பு – பொறியியல் பணியிடங்களுக்கான நபர்களை மாற்றுப்பணி / கடன் அடிப்படையில் அரசுத் துறைகள், வாரியங்கள் மற்றும் நிறுவனங்களிலிருந்து பெற்று பணியமர்த்தல் – அரசாணைக்கு திருத்தம் வெளியிடப்படுகிறது.

---

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை

அரசாணை (நிலை) எண். 214 நாள்: 09.11.2009

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண்.93 ந.நி.(ம)கு.வ. துறை, நாள் 28.05.1998
2. அரசாணை (நிலை) எண்.24 ந.நி(ம)கு.வ. துறை, நாள் 12.02.2007
3. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடித ந.க.எண்.17198/2009/எப்2, நாள் 13.04.2009.
4. பேரூராட்சிகளின் இயக்குநரின் கடித ந.க.எண்.6438/2009/அ2, நாள் 04.07.2009.

---

**ஆணை:**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணைப்படி பேரூராட்சிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள பொறியியல் பணியிடங்களுக்கான நபர்களை மாற்றுப் பணி அடிப்படையில் நகராட்சி பொறியாளர் அலகிலிருந்து பெற்று பணியமர்த்தப்பட வேண்டுமென்று அரசு ஆணையிட்டதை தொடர்ந்து பேரூராட்சிகளின் இயக்குநரின் கருத்துருவின் பேரில் பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணைக்கு கீழ்க்கண்டவாறு திருத்தம் வெளியிடப்பட்டது:-

"புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள மேற்கண்ட பொறியியல் பணியிடங்களுக்கான நபர்களை தேவைக்கேற்ப மாற்றுப்பணி அல்லது கடன் அடிப்படையில் பிற அரசு துறைகள், வாரியங்கள் மற்றும் நிறுவனங்களிலிருந்தும் பெற்று பணியமர்த்தப்படலாம் என அரசு ஆணையிடுகிறது."

2. பார்வை 3 மற்றும் 4–ல் படிக்கப்பட்ட கடிதங்களில், நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகியோர் நகராட்சி துறையில் பொறியியல் பணியில் பணிபுரியும் பொறியாளர்களுக்கு போதிய முன் அனுபவம் உள்ளது என்றும், பிற துறைகள், வாரியங்கள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் பொறியாளர்களுக்கு அந்தந்த துறையை சார்ந்த பணிகளில் மட்டுமே அனுபவம் உள்ளது என்றும் எனவே, இந்நிலையில் இனிவரும் காலங்களில் பேரூராட்சி துறையில் பொறியியல் பிரிவில் ஏற்படும் காலி பணியிடங்களுக்கு அனுபவம் வாய்ந்த நகராட்சி துறையிலிருந்து பொறியாளர்களை மாற்றுப் பணியில் பணிபுரிய ஈர்த்துக் கொள்ளலாம் என்றும் நகராட்சி துறையிலிருந்து மாற்றுப் பணியில் பேரூராட்சி துறையில் பணிபுரிய போதிய பொறியாளர்கள் இல்லாத சூழ்நிலையில் மட்டுமே பிற துறைகள், வாரியங்கள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் பொறியாளர்களை பேரூராட்சி துறைக்கு மாற்றுப் பணியில் பணிபுரிய அனுமதிக்கலாம் எனவும் கருத்து தெரிவித்துள்ளனர்.

3.மேலே பத்தி 2–ல் தெரிவிக்கப்பட்டுள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகியோரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தபின், நகராட்சி துறையிலிருந்து மாற்றுப் பணியில் பேரூராட்சி துறையில் பணிபுரிய போதிய பொறியாளர்கள் இல்லாத சூழ்நிலையில் மட்டுமே பிற துறைகள், வாரியங்கள், நிறுவனங்களில் பணிபுரியும் பொறியாளர்களை பேரூராட்சிகள் துறைக்கு மாற்றுப்பணியில் பணிபுரிய அனுமதிக்கலாம் என்று முடிவு செய்துள்ளது. அதற்கிணங்க அரசாணை (நிலை) எண். 24, ந.நி.(ம)கு.வ.துறை, நாள் 12.02.2007–ற்கு கீழ்க்கண்டவாறு அரசு திருத்தம் வெளியிடுகிறது:-

<u>**திருத்தம்**</u>

| அரசாணை (நிலை) எண்.24 ந.நி.(ம)கு.வ துறை, நாள் 12.02.2007ல் தற்போதுள்ளது | திருத்தம் வெளியிடப்பட வேண்டியது |
|---|---|
| "புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள மேற்கண்ட பொறியியல் பணியிடங்களுக்கான நபர்களை தேவைக்கேற்ப மாற்றுப்பணி அல்லது கடன் அடிப்படையில் பிற அரசு துறைகள், வாரியங்கள் மற்றும் நிறுவனங்களிலிருந்தும் பெற்று பணியமர்த்தப்படலாம் என அரசு ஆணையிடுகிறது." | "புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள மேற்கண்ட பொறியியல் பணியிடங்களுக்காக நபர்களை தேவைக்கேற்ப மாற்றுப்பணி அல்லது கடன் அடிப்படையில், நகராட்சி துறையிலிருந்து, பேரூராட்சி துறையில் பணிபுரிய போதிய பொறியாளர்கள் இல்லாத சூழ்நிலையில் மட்டுமே, பிற துறைகள், வாரியங்கள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் பொறியாளர்களை பேரூராட்சிகள் துறைக்கு மாற்றுப் பணியில் பணியமர்த்தப்படலாம் என அரசு ஆணையிடுகிறது." |

(ஆளுநரின் ஆணைப்படி)

**நிரஞ்சன்மார்டி,**
**அரசு செயலாளர்.**

<u>**பெறுநர்:-**</u>
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை –108.
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 5.
மேலாண்மை இயக்குநர், சென்னை பெருநகர் குடிநீர் விநியோகம் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், சென்னை – 2.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை – 5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர்கள்.
மாநில கணக்காயர், சென்னை 18/35.
உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநர், சென்னை–108.
**நகல்:-**
மாண்புமிகு துணை முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை –9
செயலரின் தனிச்செயலர் (ந.நி (ம) கு.வ.), துறை, சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு2,பொது,பேரூ2,நப3)துறை, சென்னை–9.
நிதி (ந.நி.(ம)கு.வ.) துறை, சென்னை – 9.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது.)

பிரிவு அலுவலர்.